EASTERN UNIVERSITY

# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டிற்கான பொதுக் கலைமாணித் தேர்வு - 2013/2014 (ஜுன்/ஜுலை - 2017)

## ED/S - 2213 நிறுவன நடத்தையும், பயன்தருபாடசாலை முகாமைத்துவமும் (Organizational Behavior and Effective School Management)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

01. அ. அரச நிறுவனங்கள் (Government Organization), அரச சார்பற்ற நிறுவனங்கள் (Non - Government Organization) எனும் பதங்களினை விளக்கி 'பாடசாலை ஒரு நிறுவனமாகும்' எனும் கருப்பொருளினை பாடசாலையின் கட்டமைப்புக்களைக்கொண்டு தெளிவுபடுத்துக? (07 புள்ளிகள்)

ஆ. "மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான பொறுப்புக்களும் சந்தர்ப்பங்களுமே முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன" ஒரு சிறந்த முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளை வரிசைப்படுத்தி E.F.L பிரெச் கூறிய கருத்தினையும் ஆதாரம் காட்டுக? (07 புள்ளிகள்)

02. அ. "ஒரு நிறுவனத்தின் நடத்தை என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாதென்பதனை மக்ஸ் வெபரின் அதிகாரக் கட்டமைப்பின் இலட்சிய மூலங்களை ஆதாரம் காட்டி விபரிக்குக? (07 புள்ளிகள்)

ஆ. நீர் ஒரு பாடசாலை அதிபர் எனும் வகையில் பாடசாலைக்கு எதிரான அச்சுறுத்தல்களையும் (Threats), சாதகமான வாய்ப்புக்களையும் (Opportunities), இனங்கண்டறிந்து அவற்றினை பாடசாலையின் சீரிய அபிவிருத்திக்கு எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதனை தற்காலத்துடன் தொடர்புபடுத்தி ஆராய்க? (07 புள்ளிகள்)

03. அ. "பாடசாலை ஒன்றின் உயிரோட்டமுள்ள நிர்வாக செயற்பாடுகளுக்கு விளைதிறன் (Effectiveness), வினைத்திறன் (Efficiency) என்பன முக்கிய கருப்பொருள்களாகின்றன" முகாமைத்துவத்தில் இவை இரண்டினதும் தொழிற்பாடுகள் குறித்து சுருக்கமாக விளக்குக? (07 புள்ளிகள்)

ஆ. "பாடசாலை நிர்வாகம் சீரான பாதையில் செல்ல வேண்டுமெனில் பாடசாலையின் அதிபர் ஒரு முகாமையாளராகவும், சிறந்த தலைவராகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது." இக்கூற்றினை நடைமுறைச் சூழலை அடிப்படையாகக்கொண்டு ஆராய்க?

(07 புள்ளிகள்)

## பகுதி II

04. அ. "கல்வி அபிவிருத்தியில் கல்விசார் மாற்றங்களும், புத்தாக்கங்களும் அதிகளவான பங்களிப்பினை வகிக்கின்றன." அந்தவகையில் கடந்த சில தசாப்தங்களில் இருந்து இன்று வரை பாடசாலை நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் சார்பாக ஏற்பட்ட முக்கிய நான்கு (04) மாற்றங்களைப் பட்டியற்படுத்துக?

(08 புள்ளிகள்)

ஆ. பாடசாலை நிர்வாகத்தில் புதிய மாற்றங்களை உள்வாங்கும் போது எதிர்ப்புக்கள் தோற்றுவிக்கப்படுவதற்கான முக்கிய காரணங்கள் நான்கினைக்கூறி (04) அதற்கான தீர்வாலோசனைகளையும் முன்வைக்குக?

(08 புள்ளிகள்)

இ. பாடசாலை நிர்வாகத்தின் செயற்பாடுகளை தங்குதடைகள் இன்றி வினைத்திறன் மிக்க செயற்பாடுகளாக மாற்றுவதில் நேரசூசிகள் தயாரிக்கும்போது எதிர்நோக்கும் சவால்கள் நான்கினையும் (04) அதற்கான பதில் வேலைகளையும் (குறிகளையும்) சுருக்கமாகத் தருக?

(08 புள்ளிகள்)

05. அ. "பாடசாலையில் உள்ள வளங்களினைப் பயன்படுத்தி உச்ச அளவுப் பயனைப் பெறுவதே சிறந்த முகாமைத்துவமாகும்." அந்தவகையில் வளங்களினை ஒதுக்கீடு செய்பவர்கள் எவ்வாறான உத்திகளைக் கையாள வேண்டும் என்பதனை 04 உதாரணங்கள் மூலம் சுருக்கமாக விளக்குக?

(08 புள்ளிகள்)

ஆ. "கல்வியின் ஓடுபாதை" கலைத்திட்டம் எனப்படுகின்றது. இதனை அடிப்படையாகக்கொண்டு கலைத்திட்டமொன்றினை உருவாக்கும்போது அதிபர் ஒருவர் எவ்வாறான செயற்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதனை முன்னுரிமை அடிப்படையில் விளக்குக?

(08 புள்ளிகள்)

இ. "பாடசாலை முகாமைத்துவத்தில் ஒவ்வொரு செயற்பாடுகளும் கண்காணிக்கப்படும் போதுதான் அவை வலுப்பெறுகின்றன." எனவே அதிபர் ஒருவர் மேற்பார்வையை வலுப்படுத்துவதில் பயன்படுத்தக்கூடிய நவீன உத்திகள் நான்கினைக்கூறி (04) தெளிவுபடுத்துக?

(08 புள்ளிகள்)

06. அ. பாடசாலையொன்று தனிமனித, சமூக, தொண்டர் ஸ்தாபனங்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ள எவ்வாறான உத்திகளைக் கையாளவேண்டும் என்பதனை 04 உதாரணங்களைக்கொண்டு பாடசாலை அபிவிருத்தியோடு தொடர்புபடுத்தி விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ. இன்றைய கல்வித்துறை செயற்பாடுகளில் பெற்றோர் தமது பிள்ளைகள் கற்கும் பாடசாலையுடனும், ஆசிரியருடனும் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் பெற்றோருக்கான கல்வி (Parental Education) வலுப்பெறுகின்றது. இதனைப் பாடசாலையின் எவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக நடைமுறைப்படுத்தலாம் என்பதனைப் பட்டியற்படுத்துக?

(08 புள்ளிகள்)

இ. "தொடர்பாடல்களின் விளைதிறன் தன்மையை அதிகரிப்பதற்கு கூட்ட மண்டப ஒழுங்குகள் சீர்செய்யப்படவேண்டும்." கூட்டங்களின்போது தலைமை தாங்கும் தலைவர்கள் கூட்டம் நடக்கும்போதும், நடைபெற்ற பின்னரும் எவ்வாறாக செயலாற்ற வேண்டும் என்பதற்கான உத்திகளை தலா நான்கு வீதம் (04) முன்வைத்து சுருக்கமாக விளக்குக?

(08 புள்ளிகள்)

07. கீழ்வருவன தொடர்பான விடைகளை சுருக்கமாகப் பட்டியற்படுத்துக (Points format)

அ. ஹென்றி பயோலின் முகாமைத்துவ செயற்பாட்டுக் கட்டங்களின் பின்னரான வளர்ச்சி.

ஆ. பாடசாலையின் கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதி (EMIS) இன் செயற்பாடுகள்.

இ. பாடசாலை மட்ட முகாமைத்துவம் (SBM) உருவாக்கப்பட்ட நோக்கங்கள்.

ஈ. கல்வித் திட்டமிடலின் வினைத்திறனான பண்புகள்.

உ. நிறுவனம் ஒன்றின் வேலைக் களச்சூழலில் கட்டாயம் உள்ளடங்க வேண்டியவை.

ஊ. பாடசாலையில் உள்ளக ரீதியான முறைசாராக் குழுக்கள் தோன்றுவதற்கான காரணங்கள்.

(6 x 4 = 24 புள்ளிகள்)